# மார்ச் – 1, “இளைஞர் எழுச்சி நாள்”

# தி.மு.க. இளைஞர் அணியினருக்கு வேண்டுகோள்!

கழகப் பொருளாளர் தளபதி அவர்களின் பிறந்த நாளினையொட்டி, ஆண்டுதோறும் இளைஞர் அணி எழுச்சி நாளாக தமிழகம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்துவருவதோடு, ஆங்காங்கே மருத்துவ முகாம், இரத்ததான முகாம் போன்ற நிகழ்ச்சிகள், கழகத்தின் வாயிலாகவும், கழகத்தின் பல்வேறு அமைப்புகளின் சார்பிலும் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டு (2015), தி.மு.க. இளைஞர் அணி மற்றும் “ரோட்டரி கிளப்” இணைந்து இரத்ததான முகாம் மிகப்பெரிய அளவில் நடத்தப்படவுள்ளது.

எனவே, மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் தங்களது மாவட்ட, மாநகரத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி வாரியாக கிராமங்கள், ஊராட்சிகள், வார்டு – வட்டங்கள் தோறும் இரத்ததான முகாம் அமைத்து செயல்படுத்திட “ரோட்டரி கிளப்” அமைப்பிற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் நல்கிட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தி.மு.க. இளைஞர் அணி**

“அன்பகம்”
சென்னை – 600 018,
நாள் : 24.2.2015